# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 2/2014** **நாள் : 11/01/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்,
மாநில கிளைச் செயலாளர்கள்,
மாநில செயற்குழு உறுப்பினர்கள்,
மாநில பொதுக்குழு உறுப்பினர்கள்

அன்பார்ந்த தோழரே,வணக்கம்

## அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## ஊதிய உயர்வு ஒப்பந்தம்

25 மாதங்களாக காத்திருந்த மின்வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 09.01.2014 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்று முடிந்துள்ளது. பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளக்கூடிய 14 தொழிற் சங்கங்களில் பதிவு செய்யப்பட் 13 தொழிற் சங்கங்களும் சேர்ந்து 22 தொழிற் சங்கங்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன. அந்த ஒப்பந்தத்தில் மின்ஊழியர் மத்திய அமைப்பும் கையொப்பமிட்டுள்ளது.

## ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளவைகள்

1. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 30.11.2011 ஆம்ஆண்டு பெறுகின்ற ஊதியம் மற்றும் தரஊதியத்தில் 7 விழுக்காடு உயர்வு வழங்கப்படும்.

2. ஒப்பந்தத்தின் மூலம் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ. 700/-ம் அதிகபட்சமாக ரூ. 13,160/-ம் ஊதிய உயர்வாக கிடைக்கும்

3. 10 ஆண்டு அல்லது அதற்கு மேல் பணியாற்றியவர்களுக்கு பணிக்கால பயனாக ஒரு ஆண்டுயர்வு அதாவது 3 விழுக்காடு உயர்வு வழங்கப்படும். சிறப்புநிலை /தேர்வு நிலைக்கான 3% ஊதியம் என்ற நிலை 6% ஆக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

4. தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையை பொறுத்த வரை அரசு ஆணை எண் 237, நிதித்துறை - நாள் 22.07.2013-ன் ஆணைப்படி ஆண்டுயர்வு 3 சதம் அளிக்கப்பட்டது 6 சதவீதமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 1.4.2013 முதல் நிலுவை தொகையும் வழங்கப்படும்.

5. காலமுறை ஊதியத்தில் அதிகபட்ச ஊதிய நிலையை எட்டிய போதும் ஆண்டுக்கு ஒருமுறை தேக்கநிலை ஆண்டுயர்வு தொடர்ந்து வழங்கப்படும்.

6. மின்வாரிய பணியில் சேர்பவர்களுக்கு அதிகபட்ச பயிற்சிகாலம் ஓராண்டாக இருக்கும். பயிற்சி காலத்தில் தொகுப்பூதியம் வழங்கப்படும். தற்போது ஓராண்டிற்கு குறைவாக பயிற்சி காலம் உள்ள பதவிகளுக்கு தற்போதுள்ள நிலையே தொடரும். பயிற்சி காலம்

முடிந்ததும் காலமுறை ஊதியம் (ஊதியம் + தரஊதியம்) வழங்கப்படும். இது ஒப்பந்த தேதியிலிருந்து செயல்பாட்டிற்கு வரும் என்பது பயிற்சி காலம் முடிந்த தேதியிலேயிருந்து காலமுறை ஊதியம் வழங்கப்படும் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

7. ஊதிய உயர்வு நிலுவைத் தொகையின் முதல் தவணை ஜனவரி 2014-லிலும், இரண்டாம் தவணை ஏப்ரல் 2014-லிலும் வழங்கப்படும்.

8. இந்த ஊதிய மாற்ற ஒப்பந்தம் 1.12.2011 முதல் 30.11.2015 வரை 4 ஆண்டு காலம் அமலில் இருககும்.

இவை அனைத்தும் 1.1.2014 இல் தமிழக முதல்வர் வெளியிட்ட அறிவிப்பில் இடம் பெற்றுள்ளவைகளாகும்.

(அ) தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பினையொட்டியே சிலவற்றை ஒப்பந்த சரத்துக்களாக சேர்க்கப்பட வேண்டுமென தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு எடுத்த தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக நடைமுறையில் இரண்டு வருடமானால் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்பதை மாற்றி 10.08.2007 ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்ட பாதக அம்சமான கள உதவியாளர், கணக்கீட்டாளர் 2ம்நிலை, களஉதவியாளர் மற்றும் மீட்டர் ரீடர் போன்றவர்கள் அடுத்த பதவி உயர்வுக்கு 5 வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்ற சரத்து நீக்கப்பட்டு மேற்கூறிய பதவியில் பணிபுரிபவர்கள் அடுத்த பதவி உயர்வுக்கு 2 வருடமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் தினக்கூலி ரூ. 120/-ல் இருந்து ரூ. 250/-ஆக மாற்றி அமைக்கப்படுகிறது.

(இ) மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர உழியர்களின் அடிப்படை ஊதிய விகிதம் ரூ.600-ல் இருந்து ரூ. 1300/-ம் கிரேடு-பே ரூ. 300/- என்றும் 1.12.2011 ஆண்டு முதல் என்று ஊதிய பொருத்தம் செய்யப்பட்டு அதன்பலன் ஒப்பந்த தேதியில் இருந்து அமலாக்கப்படும்.

(ஈ) தமிழக மின்வாரியத்தில் விநியோக பகுதி, கட்டுமானம் பகுதி மற்றும் மலைப்பகுதிகளுக்கும் உப கோட்ட அளவில் ஒரு சிறப்பு நிலை முகவர் பதவி அனுமதிக்கப்படும் என்ற சரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

(உ) மின்வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அவர்களுடைய பணிக்காலத்தில் 3 பதவி உயர்வு வழங்கப்படுவதில் எழுந்துள்ள பிரச்சனைகளையும் கணக்கில் கொண்டு கணக்கீட்டு பிரிவில் பணியாற்றும் ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை அகற்றும் வகையில் விநியோக திட்டங்கள் 42ற்கு கணக்கீட்டு அலுவலர் பதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஊ) களப்பிரிவு பதவி உயர்வில் உள்ள குழப்ப நிலையை அகற்றும் வகையில் இப்போதுள்ள இரண்டு வழி பதவி உயர்வை பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்பட உள்ளது.

அதிகாரிகளுக்கான துவக்கநிலை சம்பள விகிதமும், ஊழியர்களுக்கான கடைசி சம்பள விகிதமும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

இவைகள் அனைத்தும் ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள அம்சங்களாகும்.

இவை தவிர கீழ்கண்டவைகளை இந்த ஒப்பந்தத்தோடு பரிசீலிக்க வேண்டுமென்று கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

6வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஊதிய விகிதத்தில் ஏற்பட்ட குறைகளை சரிசெய்ய வேண்டி அமைக்கப்பட ஒரு நபர் குழுவின் பரிந்துறையின்படி, கீழ்கண்ட பதவிகளுக்கான கிரேடு - பே திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

| பதவி | தற்போது வழங்கும் கிரேடு-பே | ஒரு நபர் குழுவின் பரிந்துரை |
|---|---|---|
| 1. சிறப்பு நிலை முகவர்<br>உதவிப் பொறியாளர்<br>உள்ளிட்ட சமமான பதவிகள் | ரூ. 4600/- | ரூ. 5,100/- |
| 2. தொழில் நுட்ப உதவியாளர்,<br>மின்பாதை ஆய்வாளர் / வணிக ஆய்வாளர்<br>கணக்கீட்டு ஆய்வாளர்<br>கணக்கு உதவியாளர்<br>நிர்வாக உதவியாளர்<br>உள்ளிட்ட சமமமான பதவிகள் | ரூ. 2,700/- | ரூ. 2,800/- |

2. கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்கள் மாற்று பதவிகளுக்கு செல்ல ஊழியர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அனுமதித்தல்,

3. மின்வாரியத்தில் பணியாற்றும் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் வழக்கில் உள்ள ஒப்பந்த தொழிலாளர்களையும், இதர பகுதி தொழிலாளிகளையும் அடையாளங்கண்டு பணிநிரந்தரம் செய்திட,

4. பயிற்சி காலத்தில் காலமுறை ஊதியமாக ரூ. 8000/-வழங்கிட,

5. ஒரே ஊதிய விகிதத்தில் உள்ளவர்களுக்கு அதே ஊதியத்தில் உள்ள இதர கேடர் பதவிக்கு மாறும் போது இரு கேடர்களிலும் பணியாற்றிய காலத்தையும் கணக்கில் கொண்டு தேர்வு நிலை வழங்கிட, ஒரே கேடரில் வேறு வேறு வட்டத்தில் பணியாற்றி இருந்தாலும் அவர்களுக்கும் ஒரே கேட்டகிரியில் பணியாற்றிய காலமாக கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்கிட,

6. கடந்த ஒப்பந்த தேதிக்கு பின்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கும் அலவன்ஸ்களை இரட்டிப்பாக வழங்குதல்,

7. உள்முக தேர்வில் வருகின்றவர்களுக்கு நியமனப் பதவியின் கிரேடு-பே வழங்கிட வேண்டும்.

8. மின்வாரியத்தில் காலி பணியிடங்கள் அனைத்தையும் உடனடியாக நிரப்பிட வேண்டும்.

என்பன போன்ற கோரிக்கைளை பரிசீலித்திட வேண்டுமென ஒப்பந்தத்தின் போது நமது தரப்பில் வாரியத்திற்கு கடிதமாக கொடுக்கப்பட்டுள்ளது.

- **தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தமிழக முதலமைச்சர் அறிவித்துள்ள ஊதிய உயர்வும்,**
- **அதனையொட்டியே பதவி உயர்வுக்கான காலத்தை குறைத்தது.**
- **ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ. 250/- கூலிஉயர்வாக பெற்றது.**

- **பகுதி நேர ஊழியர்களுக்கு ரூ. 600/-ல் இருந்து ரூ. 1300/- ஆகவும் கிரேடு -பே ரூ. 300/- என்று மாற்றியது,**
- **ரூரல், மலைப்பகுதி போன்ற இடங்களில் உள்ள உபகோட்ட அலுவலகங்களுக்கு ஒரு சிறப்பு நிலை முகவர் என்ற பதவி பெற்றது.**
- **கணக்கீட்டு பிரிவில் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை அகற்றும் வகையில் மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களுக்கு ஒரு மதிப்பீட்டு அலுவலர் பதவியை பெற்றது.**

**போன்றவைகள் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் முயற்சியினால் மட்டுமே கிடைத்தது என்பது ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை எடுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.**

## நன்கொடை ரூ. 500/-

ஊதிய உயர்வு நன்கொடையாக ரூ. 500/-ஐ மின்வாரிய ஊழியர்கள் மத்தியில், வசூலிப்பது அதுவும் விருப்ப படிவத்தில் விருப்பத்தினை பெற்று வாரியத்திடம் அளித்து வாரியமே வசூலிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இம்முடிவினை அமலாக்குவதில் நமது முழு சக்தியை பயன்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொங்கல் வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்